**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்.**

முன்னிலை: **திரு.S.கணேஷ், எம்.காம்., எம்.எல்.,**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்

**2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 30-ஆம் நாள் புதன்கிழமை**
**அசல் வழக்கு எண் - 312/2015**
**CNR No:TNAL050004002015**

சக்திவேல், வயது 41, த/பெ.கலியபெருமாள் படையாட்சி,
தாவடநல்லூர் கிராமம், உடையார்பாளையம் தாலுக்கா,
அரியலூர் மாவட்டம். - வாதி

/எதிர்/

1. தமிழரசி, வயது 45, க/பெ.வேல்முருகன், தாவடநல்லூர் கிராமம், உடையார்பாளையம் தாலுக்கா, அரியலூர் மாவட்டம்.
2. சுந்தரவடிவேல், வயது 35, த/பெ.கலியபெருமாள் படையாட்சி,
தாவடநல்லூர் கிராமம், உடையார்பாளையம் தாலுக்கா,
அரியலூர் மாவட்டம்.
3. தனலெட்சுமி, வயது 33, க/பெ.எழில்பாலமுருகன்,
பெரியாத்துக்குறிச்சி கிராமம், உடையார்பாளையம் தாலுக்கா,
அரியலூர் மாவட்டம். - பிரதிவாதிகள்

| | | |
|---|---|---|
| வழக்கு தாக்கல் நாள் | : | 23.09.2015 |
| வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் | : | 28.09.2015, |
| வியாஜ்ஜிய மூலம் | : | 22.06.2015, 27.06.2015 |
| வழக்கின் மொத்த பொறுமானம் | : | Rs.22,125/- |
| செலுத்தவேண்டிய நீதிமன்ற கட்டணம் | : | Rs.100/- |
| செலுத்திய நீதிமன்ற கட்டணம் | : | Rs.100/- |
| நீதிமன்ற கட்டணத்திற்கான சட்டப்பிரிவு | : | 37(2), TNCF Act |

தாவா சொத்துக்களில் வாதிக்குள்ள 4 ல் 1 பாக உரிமை உடையவர் என்று விளம்புகை செய்து முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பித்தும், பின்னர் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்தும் தாவா சொத்துக்களில் வாதிக்குரிய 4 ல் 1 பாகத்தை பிரித்து நல இளப்பம் சரி கட்டி பிரிவினை செய்து இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பித்தும், அதன் தொடர்பாக வாதிக்குரிய பாகத்திற்கு தனி சுவாதீனத்திற்கு உத்தரவிட்டும், தாவா செலவுத்தொகை பிரதிவாதியிடமிருந்து, வாதிக்கு கிடைக்கவும், மற்றும், சமூகம் கோர்ட்டார் அவர்களுக்கு தம்யுக்தமாகத் தோன்றும் இதர பரிகாரங்கள் கிடைக்குமாறு உத்திரவு பிறப்பிக்கவும், வாதி பிரார்த்திக்கின்றார்.

இவ்வழக்கானது 30.08.2023–அன்று என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்ததில், வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.R.நடராஜன் அவர்கள் முன்னிலையாகியும், 2–ம் பிரதிவாதி தரப்பில் திரு.R.சுரேஷ்குமார் அவர்கள் முன்னிலையாகியும், 1 மற்றும் 3–ம் பிரதிவாதிகள் தரப்பில் தோன்றாதரப்பினராக கருதப்பட்டும் வழக்கு கோப்பு ஆவணங்களை பரிசீலித்தும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்...

## தீர்ப்பாணை

1) வாதி அழைத்தும் ஆஜரில்லை. வாதி தரப்பபில் யாரும் ஆஜரில்லை.

2) மாலை 4 மணிக்கு மீண்டும் அழைக்கப்பட்டும் வாதி தரப்பில் யாரும் ஆஜரில்லை.

3) இவ்வழக்கு நீண்ட காலமாக நிலுவையில் இருந்து வரும் வழக்குகளின் கீழ் வரும் நிலையில் வாதி தரப்பில் விசாரணையை தொடங்க முன்வரவில்லை.

4) எனவே நீதியின் நலன் கருதி இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது.

5) செலவுத்தொகை இல்லை.

2023–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 30–ஆம் நாள் என்னால் கையொப்பம் இடப்பட்டு இந்நீதிமன்ற முத்திரையுடன் வழங்கப்பட்டது.

## சொத்து விபரம்

அரியலூர் பதிவு மாவட்டம், உடையார்பாளையம் தாலுகா, சிலுவைச்சேரி கிராமத்தில்,

| | |
|---|---|
| 1) சர்வே எண் 199 – 12B–ல் | 0.30 செண்ட். |
| 2) சர்வே எண் 142 – 7D–ல் | 0.26 செண்ட். |
| 3) சர்வே எண் 142 – 1E4–ல் | 0.09 செண்ட். |
| 4) சர்வே எண் 144 – 6D–ல் | 0.18 1/2 செண்ட். |
| 5) சர்வே எண் 146 – 1G–ல் | 0.05 செண்ட். |
| கூடுதல் | 0.88 ½ செண்ட். |

ஒப்பம்/–திரு.S.கணேஷ், எம்.காம்., எம்.எல்.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.

கூடுதல்மாவட்டஉரிமையியல்
நீதிமன்றம், ஜெயங்கொண்டம்
அசல் வழக்கு எண்.312/2015
தீர்ப்பாணை
நாள்: 30.08.2023